**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029485

1. District : மாவட்டம் அரியலூர் — PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை — Year: ஆண்டு 2018 — FIR No.: மு.த.அ. எண் 3/2018 — Date: நாள் 07.12.2018

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம், 1988 — Sections பிரிவுகள்: 7 ஊ.த.சட்டம், 1988
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 06.12.2018 — Date from : நாள் முதல் 15.30 — Date to : நாள் வரை [illegible]
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.12.2018 — Time : நேரம் 09.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம் 10.30 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் -
(b) Address : முகவரி 3 கி.மீ. வட மேற்கு
அரியலூர் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை மருதையாறு வடிநில கோட்ட அலுவலகம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. [illegible]
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கதிர்வேல்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1979
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம்
(g) Address : முகவரி மேலத்தெரு, நல்லநாயகபுரம், வெற்றியூர், செந்துறை TK, அரியலூர் மா.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. மணிமாறன், AE, பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை மருதையாறு வடிநில கோட்ட அலுவலகம், அரியலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 07.12.2018-ந் தேதி காலை 09.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் ஆகிய நான் அலுவலகத்திலிருந்த போது திரு.K.தமிழ்வேல், த/பெ. கதிர்வேல், கிழக்குத்தெரு, நல்லநாயகபுரம் கிராமம், வஞ்சினபுரம், செந்துறை தாலுக்கா, அரியலூர் மாவட்டம் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் பின்வருமாறு:- 7.12.2018 அனுப்புதல் K.தமிழ்வேல், த/பெ. கதிர்வேல், கிழக்குத்தெரு, நல்லநாயகபுரம் கிராமம், வஞ்சினபுரம், செந்துறை தாலுக்கா, அரியலூர் மாவட்டம் பெறுதல் உயர்திரு ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், அரியலூர் மாவட்டம். நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 10 வது வரை படித்துள்ளேன். விவசாயம் செய்துவருகிறேன். எங்கஊர் நல்லநாயகபுரம் கிராமத்தில் பெரிய ஏரி உள்ளது, அதற்கு நல்லநாயகபுரம் பெரிய ஏரி பாசனதாரர்கள் சங்கம் என்று அமைத்து, பதிவு எண் 144/2018 ஆக பதிவு செய்துள்ளோம். அந்த சங்கத்திற்கு நான்தான் தலைவர். கடந்த 4 மாதங்களுக்கு முன்பு நல்லநாயகபுரம் பெரிய ஏரியை சுத்தம் செய்து கரை அமைப்பதற்கும், கால்வாய் அமைப்பதற்கும் அரியலூர் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை மருதையாறு வடிகால் கோட்டம் மூலமாக ரூபாய் 18,46,773/-க்கு எங்கள் சங்கத்திற்கு DR No.16/2018-19ன்படி கடந்த ஜூலை 2018ல் ஒப்பந்தஆணை வழங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தத்தின்படி நான் நல்லநாயகபுரம் பெரிய ஏரியை ஒரு மாதகாலத்திற்குள் சுத்தம் செய்து, 100 மீட்டருக்கு வாய்க்கால் கட்டி வேலைகள் முடிக்கப்பட்டது. மேற்படி பணிகள் நிறைவேற்றியதை தொடர்ந்து AE மணிமாறன் அவர்கள்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு K. Tamilvel
7-12-2018

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.12.2018
11.00 hrs

Name: பெயர் G. RAMESH KUMAR
Rank: நிலை ......................No. எண் ..........
Inspector of Police
V&AC, Ariyalur

**அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 3/2018 வழக்கின் தொடர்ச்சி** :-

பணிகள் அளவீடுகள் செய்து M-Book கையெழுத்து பெற்று, கடந்த 19.09.2018 தேதி ரூபாய் 12,78,433/- யை அரியலூர் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை மருதையாறு வடிகால் கோட்டம் மூலமாக சங்கத்தின் வங்கி கணக்கிற்கு ECS மூலம் பணம் பரிமாற்றம் செய்யப்பட்டது. நான் செந்துறை பாண்டியன் கிராம வங்கியில் பணத்தை பெற்றுக்கொண்டேன். பின்னர் மீதமுள்ள தொகைக்கு அரியலூர் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை மருதையாறு வடிகால் கோட்ட AE மணிமாறன் அவர்கள் பணிகள் அளவீடுகள் செய்து M-Book எழுதி, ஒரு பேப்பரில் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டி கையெழுத்து வாங்கிக்கொண்டார். மீதமுள்ள தொகையை வழங்கக்கோரி அரியலூர் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை மருதையாறு வடிகால் கோட்ட அலுவலகத்திற்கு சென்றபொழுது பில் ரெடியாகவில்லை என்று சொன்னார்கள். நான் நேற்று 6.12.2018 தேதி மதியம் 3.30 மணியளவில் அரியலூர் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை மருதையாறு வடிகால் கோட்ட அலுவலகத்திற்கு சென்று AE மணிமாறன் அவர்களை சந்தித்து பில் ரெடியாகிவிட்டதா என்று கேட்டதற்கு அவர் final பில் போட வேண்டும் என்றால் மொத்த தொகையில் தனக்கு 2 %, SDO திருமதி.சாந்தி அவர்களுக்கு 1%, approval-க்கு ½ % கமிஷனாக கொடுத்தால்தான் final பில் அனுப்ப இயலும் என்றும், எல்லாம் எழுதி கையெழுத்து போட்டு தேதி குறிப்பிடாமல் ரெடியாக உள்ளது என்றும், பணம் கொடுத்தால் உடனே ECS செய்துவிடுவோம் என்று AE மணிமாறன் அவர்கள் சொன்னார். நான் AE மணிமாறன் அவர்களிடம் என்னிடம் தற்போது பணம் ஏதும் இல்லை, SDO அவர்களை பார்க்கவா என்று AE யிடம் கேட்டதற்கு, AE மணிமாறன் அவர்கள் என்னிடம் SDO அவர்களை பார்க்கவேண்டாம், நான் சொல்வதைதான் அவர்கள் கேட்பார்கள், பணம் கொடுத்தால்தான் பில் பாசாகும், அதனால் நாளைக்கு 1 % தொகையாக ரூபாய் 18,000த்தை என்னிடம் கொடுத்துவிடுங்கள், மீதி பணத்தை பில் பாசானபிறகு கொடுங்கள் என்று சொன்னார். நான் வேறுவழியில்லாமல் சரி எடுத்து வருகிறேன் என்று AE மணிமாறன் அவர்களிடம் சொல்லிவிட்டு வந்து விட்டேன். AE மணிமாறன் அவர்கள் என்னிடம் அவருக்கும் SDO சாந்தி அவர்களுக்கும் கமிஷன் என்று லஞ்சமாக கேட்ட ரூபாய் 18,000/-த்தை AE மணிமாறன் அவர்களிடம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் என்னிடம் லஞ்சம் கேட்ட AE மணிமாறன் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க அரியலூர் லஞ்ச ஒழிப்புதுறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து, AE மணிமாறன் என்னிடம் லஞ்சமாக கேட்ட ரூபாய் 18,000/- த்தை தயார்செய்து எடுத்துக்கொண்டு வந்து இன்று 7.12.2018 தேதி இந்தபுகாரை கொடுக்கிறேன். எனக்கு கிடைக்க வேண்டிய நிலுவை தொகைக்கு final பில் பாசாக ரூபாய் 18,000/- லஞ்சம் கேட்ட அரியலூர் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை மருதையாறு வடிகால் கோட்ட அலுவலக AE மணிமாறன் அவர்களின் மீது

சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள (ஆங்கிலத்தில் ஒப்பம்) K.Tamilvel 7.12.2018 SUBMITTED Sir, Received this computer typed written complaint from the complainant on 07.12.2018 at 09.00 AM, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 07.12.2018 at 10.30 AM in Ariyalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.3/2018, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988.

7.12.2018
(G.RAMESH KUMAR)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Ariyalur.

I am submitting the Original F.I.R, along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Ariyalur and the copies of the F.I.R. to all other concerned Officials.

7.12.2018
(G.RAMESH KUMAR)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Ariyalur.